## பராமரிப்புக் குழு பெருக்கத்தின் திட்டமிடுதலின் படிகள்

படிவத்தின் இடதுபுறத்தில்

1) **விசுவாச இலக்கு 1 - எந்நாளில் பராமரிப்புக் குழு பெருக்கமடையும்?**

படிவத்தின் வலதுபுறத்தில்

2) **விசுவாச இலக்கு 2 - தலைமைத்துவ அடித்தள விரிவாக்கம்**
- புதிய தலைவர், உபதலைவர், ஆவிக்குரிய பெற்றோர்களின் எண்ணிக்கை.

3) பயிற்சிக்கான, கூடுதல் இடத்திற்கான, தலைமைத்துவ பராமரிப்புக்குழுவின் ஈடுபாட்டிற்கான திட்டமிடுதல்.

- பயிற்சிக்கான திட்டமிடுதல்.

  - **உங்கள் பராமரிப்புக் குழுவில் உள்ள அனைவரின் பெயர் மற்றும் அவர்களின் தற்போதைய நிலையைக் குறிப்பிடவும் - அங்கத்தினர், ஆவிக்குரிய பெற்றோர், உபதலைவர், தலைவர்.**

  - **பராமரிப்புக் குழு பெருகும் கால கட்டத்தில் அவர்கள் நிலை என்னவாக இருக்க வேண்டும்.**

  - **என்ன பாடங்களை படிக்க செல்ல வேண்டும் என எழுதுக.**

  - **புதிய பராமரிப்புக் குழுவிற்கான வாய்ப்புள்ள வீட்டை திட்டமிடுதல்**

  - **தலைமைத்துவ பராமரிப்புக் குழுவிற்கு அழைக்கப்பட வேண்டியவர்களைத் திட்டமிடல்.**

படிவத்தின் இடதுபுறத்தில்

4) **மாத கட்டம் - ஒவ்வொரு நிலைக்கு தேவையான வாரங்கள் எத்தனை என கணக்கிடல் (ஆரம்ப நிலை - மாறும் நிலை, மாறும் நிலை - ஐக்கிய நிலை, ஐக்கிய நிலை - செயல்படும் நிலை, செயல்படும் நிலை - பெருகும் நிலை) ஒவ்வொரு நிலையில் வரும் சரியான மாதங்களையும் எழுதவும்.**
- ஒவ்வொரு நிலைக்கான வழிகாட்டுதல்.
- ஆரம்ப நிலையிலிருந்து மாறும் நிலைக்கு (2 முதல் 3 மாதங்கள்)
- மாறும் நிலையிலிருந்து ஐக்கிய நிலைக்கு (2 முதல் 3 மாதங்கள்)
- ஐக்கிய நிலையிலிருந்து செயல்படும் நிலைக்கு (2 முதல் 3 மாதங்கள்)
- செயல்படும் நிலையிலிருந்து பெருகும் நிலைக்கு (1மாதம்)

5) **சிறப்பு நிகழ்ச்சி / சுவிசேஷம் அறிவிக்கும் வாய்ப்புகள்**
- சபையின் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி எழுதவும்.

**Copyright © 2003 by Global Leadership Network**

6) **குறிப்புகள் கட்டம்**

- பொது விடுமுறை மற்றும் பள்ளி விடுமுறை நாட்களை வரிசைப்படுத்தி எழுதவும்

- ஒவ்வொரு நிலையிலும் கவனிக்க வேண்டிய முக்கியமானவைகளை வரிசைப்படுத்தி எழுதவும்.

  - தகுதிப்படுத்தும் வகுப்புகளைக் குறித்து மக்களிடம் பேச வேண்டும் - ஞானஸ்நானம், ஆவிக்குரிய பெற்றோர், பராமரிப்புக் குழு தலைவர் பயிற்சி.
  - தலைமைத்துவ பராமரிப்புக் குழுவில் சேர்க்கப்பட வேண்டியவர்களிடம் பேசுதல்.
  - தங்கள் வீடுகளை பராமரிப்புக் குழுவிற்காக கொடுக்க உள்ளவர்களிடம் பேசுதல்.

7) **சிறப்பு நிகழ்ச்சிகள் / சுவிசேஷம் அறிவிப்பதற்கான செயல்கள்:**

(ஒவ்வொரு நிலையின் குறிக்கோளை அடைவதற்கு ஏற்றார் போல் பராமரிப்புக் குழுவின் நிகழ்ச்சிகளை அட்டவணைப்படுத்தல்)

- வளர்ச்சியை நோக்கி செல்லும் பராமரிப்புக் குழுவின் வெளிப்புற ஊழியங்களை திட்டமிடுதல் - கரிசனை செயல்கள், கரிசனை நிகழ்ச்சி, கரிசனை சாட்சி. பராமரிப்புக் குழு பெருகுவதற்க்கு தேவையான போதுமான அளவு வெளிப்புற ஊழிய முயற்சிகள் இருக்க வேண்டும்.

**திட்டமிடுதலின் முடிவில் கேட்கப்பட வேண்டிய கேள்விகள்:**

1. வரிசைக்கிரமம்: கரிசனை சாட்சிக்கு முன் கரிசனை செயல்கள் / நிகழ்ச்சிகள்

2. போதுமான அளவிற்கு நிகழ்ச்சிகள் உண்டா? அளவுக்கதிகமான நிகழ்ச்சிகள் உண்டா?

3. நோக்கம் மற்றும் மக்கள் முக்கியத்துவத்திற்கு இடையே சமநிலை இருக்கிறதா?

**Copyright © 2003 by Global Leadership Network**

## இணைப்பு 2

## வராந்திர பராமரிப்புக் குழு கூட்டத்திற்கான திட்டமிடுதலின் படிகள்.

1) 1வது கட்டம் - வாரம், தேதியை எழுதவும்.

2) கடைசி கட்டம் - குறிப்புகள்
   a) ஒவ்வொரு நிலை மற்றும் அதற்கேற்ற நிகழ்ச்சி நிரலை எழுதுக. (உ-ம்) ஆரம்ப நிலை - மாறும் நிலை - இணைப்பு, மாறும் நிலை - ஐக்கிய நிலை - மகிமைப்படுத்து, வளரு.

   b) முக்கியமாய் செய்ய வேண்டியவை – (உ-ம்). ஞானஸ்நானம், ஆவிக்குரிய பெற்றோர் மற்றும் பராமரிப்புக் குழு பயிற்சிக்காக பெயர் கொடுத்தவர்கள்.

3) இணைப்பு - ஒவ்வொரு நிலைக்கு ஏற்றார் போல அனைத்து வாரங்களிலும் இணைப்பு நிகழ்ச்சியை (திட்டமிட்ட / திட்டமிடாத) தீர்மானித்தல்.

4) ஆயத்தப்படுத்து - ஒவ்வொரு வாரத்திற்கான ஆயத்தப்படுத்து நிகழ்ச்சி நிரலைத் திட்டமிடுதல்.

   a) சபை / பராமரிப்புக் குழு நிகழ்ச்சி - (உ.ம்) ஈஸ்டர் சுவிசேஷம் அறிவிக்கும் நிகழ்ச்சி, பராமரிப்புக் குழு சுற்றுலா.

   b) தரிசனம், உட்புகுத்தப்பட வேண்டிய மதிப்பீடுகள், (உ.ம்) - ஐக்கியத்தை கட்ட உற்சாகப்படுத்துதல்.

   c) உதவி ஊழியங்கள் - வாராந்திர ஆராதனையில் உதவி ஊழியம் செய்ய பராமரிப்புக் குழுவை திரட்டுதல்.

5) ஒவ்வொரு வாரத்திற்கும் எந்த பராமரிப்புக் குழு நிகழ்ச்சி நிரலை உபயோகிக்க வேண்டும் என் தீர்மானித்தல் - கூட்டத்திற்கான நோக்கத்தை தழுவியதாக இருத்தல்.

6) ஒவ்வொரு பராமரிப்புக் குழுவின் நிகழ்ச்சி நிரலுக்கான நேரத்தை திட்டமிடுதல் - பராமரிப்புக் குழு நடக்கும் நேரம் மொத்தமாக 2 மணி நேரத்திற்கு மேல் செல்லக் கூடாது.

7) ஒவ்வொரு பராமரிப்புக் குழுவின் நிகழ்ச்சி நிரலை நடத்தும் நபர்களைத் திட்டமிடுதல் - தலைமைத்துவ வளர்ச்சியை மனதில் கொண்டு.

8) திரும்பி பார்த்தல் ⟶ குறிப்பிட்ட நிலைக்கு ஏற்றவாறு பராமரிப்புக் குழுவின் நிகழ்ச்சி நிரல் உள்ளதா என்று திட்டமிடுதலின் முடிவில் உங்களையே கேட்டுக் கொள்ளவும்.

**Copyright © 2003 by Global Leadership Network**